**மாலிம்பட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஜூலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, மாலிம்பட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) தெலிஜ்ஜவில நூலக கட்டிடத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 781,042 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பாதை ஒன்று அபிவிருத்தி செய்தல் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 200,000 இற்கான தொகையினைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான நிலுவை விளம்பர அறிவதித்தல் பலகை கட்டண பெறுமதி ரூபா 94,890 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய எரிபொருள் கட்டணம் ரூபா 37,706 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 52,250,798 தொகைகள் கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள 16 மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,570,742 தொகையாகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 16,234,661 தொகை செலுத்த வேண்டிய மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள 18 மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,008,425 தொகைக்கான மீதிகள் அடங்கியிருந்தன.

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 114,167,156 தொகைக்கான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

#### 1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் ஏழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்த்திருக்கவில்லை. |
| (iii) விதி 199 | பொது களஞ்சியம் மற்றும் மின்சார களஞ்சிய இருப்புக்கள் பதிவேட்டில் பெறுவனவுகளை பதிவு செய்யும் பக்கத்தில் காணப்படும் அனைத்து பதிவுகளுக்கும் எதிரே பண்டங்களுக்காக பணம் செலுத்தப்பட்ட உறுதிச் சான்றின் இலக்கம் மற்றும் திகதி பதிவு செய்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 574,409 தொகை பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயம் 10.1 ஆம் உப பிரிவு மற்றும் பொது நிருவாக உள்நாட்டு விவகார அமைச்சு செயலாளரின் 2013 அக்தோபர் 09 திகதிய 21/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிபந்தனைகளுக்கு இணங்காத முறையில் 03 உத்தியோகத்தர்களு க்கு 90 நாட்களுக்காக விடுமுறை நாள் சம்பளமாக ரூபா 126,823 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,520,472 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,200,750 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,449,000 | 1,261,776 | 1,212,335 | 133,099 | 1,288,900 | 1,206,262 | 1,223,665 | 83,658 |
| வாடகை | 2,963,600 | 1,676,617 | 1,674,117 | 95,728 | 1,463,100 | 1,633,935 | 1,662,235 | 93,228 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 632,000 | 457,734 | 457,734 | 16,800 | 460,000 | 590,255 | 590,255 | 16,800 |
| ஏனைய வருமானங்கள் | 18,509,700 | 20,898,757 | 9,554,261 | 39,258,043 | 14,546,300 | 18,613,941 | 2,598,450 | 27,913,547 |
| மொத்தம் | 23,554,300 | 24,294,884 | 12,898,447 | 39,503,670 | 17,758,300 | 22,044,393 | 6,074,605 | 28,107,233 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 23,554,300 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 24,294,884 ஆக காணப்பட்டது. ரூபா 28,107,233 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 52,402,117 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 12,898,447 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 39,503,670 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) வீதவரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை வீதவரி மீதி ரூபா 73,080 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 149,512 தொகை ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 222,292 தொகை அகற்றப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 101,222 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 121,370 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

#### (ஆ) ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதி ரூபா 8,052 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 4,514 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 12,566 தொகை அகற்றப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 837 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 11,729 தொகை நிலுவையாக காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

ஆரம்ப நிலுவை ரூபா 93,228 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,421,568 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,514,796 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 1,419,068 ஆகக் காணப்படாமையினால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 95,728 தொகை நிலுவை காணப்பட்டது. ஆரம்ப நிலுவை மீதியில் ஒரு தொகையேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,440,112 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 37,817,931 தொகையாகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை (out put) பெற்றுக் கொள்ளாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபை நிதியத்திலிருந்து ரூபா 11,000,000 இற்கான 31 அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் அவற்றில் 30 வேலைத் திட்டங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை.

(ii) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாலிம்பட சந்தை வளவில் இடை செருகல் துண்டுக் கற்கள் பதித்து திருத்துவதற்காக 2017 ஆண்டின் போது ரூபா 2,000,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட செயற்திட்டம் நிறை வேற்றப்படாமையால் பணம் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை மிகைத்து 08 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், ஒரு ஊழியருக்கான வெற்றிடம் காணப்பட்டது.

(ஆ) திறைசேரி செயலாளரின் 2014 மார்ச் 31 ஆம் திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்க 3/2014 இன் பிரகாரம் முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் இன்றி சேர்க்கப்பட்டிருந்த அமைய, ஒப்பந்த மற்றும் பிரதியீட்டு அடிப்படையிலான 05 ஊழியர்களுக்காக 2017 ஆண்டிற்கான சம்பளமாக ரூபா 2,302,373 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபையின் 9 சுகாதார ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போது 60 வயதை விஞ்சிய இரு சுகாதார தொழிலாளர்கள், அமைய, அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பப்பட்டு 2017 ஆண்டின் போது ரூபா 442,680 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற / குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண சபைக்கு சொந்தமான கப் வண்டியொன்று 2010 ஆண்டில் இராணுவ சேவைக்காக எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு சிதைவடந்த நிலையில் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாலிம்பட சந்தையை நிர்மாணிப்பதற்காக தென் மாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலாளரினால் 2016 நவம்பர் 11 திகதி ரூபா 3,420,704 இற்கான தொகைக்காக ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொண்டு, அனைத்து மேற்பார்வை அலுவல்களும் சபைக்கு காட்டப்பட்டிருந்தது. உரிய தினத்தில் சபையினால் சிட்டைகள் சமர்பிக்காமையினால் ஒதுக்கிய தொகையில் ரூபா 2,199,907 தொகையொன்று செலவிட முடியாதிருந்ததுடன், ரூபா 1,800,093 தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சந்தை கட்டிடத்தின் தரை மாடி ஒரு வருட காலத்தை விட மிகையான காலம் செயற்படாது காணப்பட்டது. அதன் காரணமாக சந்தையை நடத்துவதற்காக தனியார் காணி ஒன்றினை வாடகை பெற்று 2017 ஆண்டின் போது ரூபா 120,000 தொகையொன்று வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

உள்ளூராட்சி ஆணையாளரின் 1997 ஆக்தோபர் 29 ஆம் திகதி தபபா/07/பலவின கடித்தத்தின் மூலம் அத்தியவசிய சேவைகளில் கடமையாற்றுவதற்காக மாதாந்தம் 80 மணித்தியாளம் மேலதிக நேர வேலை அனுமதிப்பதற்காக சபையின் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. பெண் செயலாளரினால் ஒரு ஊழியருக்கு காவல் சேவை மற்றும் வெளிக்கள சேவை தொழிலாளர் கடமைகள் இரண்டும் ஆற்றுவதற்காக நியமனம் ஒன்று வழங்கி அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து 1037.5 மணித்தியாளம் சேவையாற்றிதற்காக மேலதிக நேரப் படியாக ரூபா 71,429 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2016 திசெம்பர் 30 ஆம் திகதி ரூபா 1,245,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த டிரக்டர் வண்டியின் இயந்திர கோளாறு காணப்படுகின்றது என 2017 ஆகஸ்ட் 28 திகதி மற்றும் நவம்பர் 10 திகதிகளில் கொள்வனவு செய்திருந்த கம்பனி அறிவித்திருந்தது. 02 வருட உத்தரவாத காலத்துடன் கொள்வனவு செய்திருந்த இவ் வண்டியை குறிப்பிட்ட கம்பனிக்கு அறிவித்து மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காததுடன் 2017 ஆண்டின் போது டிரக்டர் வண்டி 02 மணித்தியாளம் மாத்திரம் ஓட்டப்பட்டிருந்தமையால் செலவிடப்பட்ட தொகையினால் எதிர்பார்த்த விளைவு கிடைத்திருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 15,790,011 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 21 சதவீதம் முதல் 100 சதவீத வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 05 வருமான விடயங்களின் நெருங்கி இருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 5,623,123 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதிகள் 13 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அகக்க கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. போதியளவு உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்தை பெற்றிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமுல் நடத்துதல்

2009 ஜூன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் அமைப்பதற்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 தீர்க்கப்படாதிருந்த அவதானிப்புக்கள் மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 09 ஏக்கர் 01 ரூட் 36 பர்சஸ் கொண்ட 10 காணித்துண்டுகள் விளைவற்று காணப்பட்டதுடன், சபைக்குச் சொந்தமான 25 ஏக்கர் 18 பர்சஸ் கொண்ட 38 காணித் துண்டுகளின் எல்லைகள் அடையாளப்படுத்தி பாதுகாப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 175,644 தொகை பெறுமதியான துண்டுக் கல் உற்பத்தி இயந்திரம் 2012 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்டது.

(இ) சபைக்கு சொந்தமான ரூபா 7,967,144 கிரயத்தையுடைய பாதை தகர்க்கும் இயந்திரம் ஒரு மணித்தியாளத்திற்கு ரூபா 1,500 வீதம் தனியார் வியாபாரி ஒருவருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததினால் அவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 105,000 தொகை சபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாலிம்பட அலவத்த ஹேன பொது மயானம் நிர்மாணிக்கும் வேலை நிறுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்கார கம்பனிக்கு ரூபா 100,000 தொகை செலுத்தி 18 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அப்பணத்தை ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) தகனசாலை நிர்மாணிப்பதற்காக 02 காணிகள் பெற்றிருந்த போதிலும் ஒரு காணி அல்லது ஒரு தகனசாலை நிர்மாணிக்கப்பட்டு பிரதேசவாசிகளின் பொது வசதிகள் வழங்கும் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக சபை கவணம் செலுத்தியிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு